R 5368 (page 381)

# அன்பின் விதிகளும் பாராளுமன்ற விதிகளும்

## LOVING RULES AND PARLIAMENTARY RULES

அகில உலக வேதமாணவ ஐக்கிய சங்கத்தின் அன்புக்குரிய நண்பர்கள் சபை மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுக்கான ஓட்டளிக்கும் காரியங்களிலும் மற்ற அனைத்து காரியங்களிலும் கர்த்தருடைய நாமத்தில் பொறுப்பை உணர்ந்தவர்களாக இருக்கின்றனர். பாராளுமன்ற விதிகளை சிலரே அறிந்திருக்கும் போது, அதை சபை கூட்டங்களில் வற்புறுத்துவது ஞானமற்றதாக இன்னும் அன்பற்றதாக இருக்கும் என்று நாங்கள் முன்னரே கூறியிருக்கிறோம். இந்த விதிகள் நிச்சயமாக நல்லதாகவும் ஞானமானதாகவும் பொதுவாக பிரயோஜனமானதாகவும் இருக்கின்றன. பாராளுமன்ற விதிகளின் ஆவி எல்லா இடங்களிலும் பொருந்தக்கூடியதாக இருக்க வேண்டும்; ஏனெனில் அவைகள் அனைவருடைய நலன்களை பாதுகாத்தல் மற்றும் பிரச்சனை இல்லாமல் காரியங்களை நடப்பித்தலுக்காக பொன்னான பிரமாணத்தின் அடிப்படையில் இயற்றப்பட்டிருக்கின்றன.

எனினும் கர்த்தருடைய பிள்ளைகளிடத்தில் அன்பானது எப்பொழுதுமே முதல் இடத்தை பெற்றிருக்க வேண்டும். அன்பானது எப்போழுதுமே பொன்னான பிரமாணத்திற்கு இசைவாக இருக்கும் பொழுது, அது நடுநிலையான நீதிக்கும் மேலானதை செய்வதற்கு சுயாதீனம் உடையதாக இருக்கிறது. ஆகையால் கர்த்தருடைய சகோதரர்கள் அனைவரும் கொள்கை எதுவும் குறுக்கிடாத பட்சத்தில், மற்றவர்களுக்காக சுய விருப்பங்களை விட்டுக்கொடுக்க விருப்பம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். [R5369 : page 381] அன்பும், சந்தோஷமும், சமாதானமும் எல்லா சபைகளிலும் வியாபித்து இருப்பதே நோக்கமாக இருக்க வேண்டும்.

சமீபத்தில் வந்த அநேக கடிதங்களில் சபை தேர்தல்கள், முன் மொழிதலின் முறைகள் முதலானவைகளைக் குறித்த கேள்விகளும், வேதாகம பாடங்களின் தொகுதி 6இல் குறிப்பிடப்பட்டிருக்கும் முன் மொழிதல் முறையிலிருந்து சற்று வித்தியாசமான முறையை பயன்படுத்துவது சரியா அல்லது தவறா என்பது பற்றிய கேள்விகளும் கேட்கப் பட்டுள்ளன. இப்படிப்பட்ட எல்லா காரியங்களிலும் சபையின் விருப்பமே பிரமாணமாக இருக்கும் என்று பதிலளிக்கிறோம். இதை கர்த்தர் சபையிடம் விட்டிருக்கிறார். சபையானது தெய்வீக ஏற்பாடுகளை அதன் தீர்மானத்தின்படி பின்பற்ற முழு அதிகாரம் பெற்றிருக்கிறது.

சில சந்தர்ப்பங்களில் வாக்குச் சீட்டு மூலமாக மூப்பர்களையும், உதவிக்காரர் களையும் தேர்ந்தெடுப்பது ஒரு நல்ல திட்டமாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். அந்த காலப்பகுதிக்கு எவ்வளவு பேர் தேவை என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டும். ஒரு வேளை அந்த வகுப்புக்கு இரண்டு மூப்பர்களும் ஐந்து உதவிக்காரர்களும் தேவையானதாக இருக்கலாம். ஆகையால் வாக்குச்சீட்டு மூலம் கர்த்தருடைய சித்தம் என்ன என்பதை அர்ப்பணம் செய்த ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டும். அவன் இரண்டு மூப்பர்கள் பேரையும் ஐந்து உதவிக்காரர்கள் பெயரையும் சீட்டில் எழுத வேண்டும். இல்லையென்றால் அதில் எதிர்ப்பு இருந்தால் தனது இரண்டு வாக்குகளை ஒரு மூப்பருக்கும் ஐந்து வாக்குகளை ஒரு உதவிக்காரருக்கும் அல்லது அவர் விரும்பும் வழியில் அந்த வாக்குகளை பங்கிட்டுக் கொள்ளலாம். இந்த விதத்தில் சிறுபான்மையினர் மூப்பர்களாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வாய்ப்புகளை பெற்றிட முடியும்.

வாக்குப்பதிவு முடிவடைந்தவுடன் அதிக வாக்குகள் பெற்ற இரண்டு மூப்பர்களும், ஐந்து உதவிக்காரர்களும் சபையின் தேர்வாக கருதப்பட வேண்டும். அதன் பின்னர் வாக்களித்தல் ஒரு முறையானதாக இருக்கும். [R5369 : page 382] அதிக எண்ணிக்கையில் வாக்கு பெற்றிருப்பவர்களுக்கு கைகளை நீட்டுதல் மூலமாக வாக்களித்து ஏக மனதுடன் தேர்ந்தெடுப்பது பொருத்தமானதாகவும் சரியானதாகவும் இருக்கும்.

உங்களது சித்தத்தை எப்படி நிறைவேற்றலாம் என்பதல்ல, கர்த்தருடைய சித்தத்தை செய்ய வேண்டும் என்பதும் ஒவ்வொரு சகோதரனுக்கும், சகோதரிக்கும் எப்படி முழு வாய்ப்பினை கொடுப்பது, அந்த வாய்ப்பினை நீங்களும் பெறுவது என்பதும் நோக்கமாக இருக்க வேண்டும் என்பதை மறக்க வேண்டாம். எந்த வகையில் முடிவுகள் பெறப்பட்டாலும், பெரும்பான்மையானவர்களின் அல்லது சபையார் அனைவரின் தீர்மானத்தை வெளிப்படுத்தினால் அதுவே சட்டப்பிரகாரமாகவும் வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இசைவானதாகவும் இருக்கும்.

"சகோதர அன்பு நிலைத்திருப்பதாக." சகோதரர்களுக்காக நமது ஜீவனை கொடுக்க நாடுவோமாக. நம்மால் கர்த்தருக்கு நேரடியாக ஊழியம் செய்ய இயலாது. சகோதரர்களுக்கு ஊழியம் செய்வதின் மூலமும், அவர்களிடத்தில் பொறுமை, தயவு மற்றும் அன்பை வெளிப்படுத்துவதின் மூலமும் நாம் மறைமுகமாக கர்த்தருக்கு ஊழியம் செய்யலாம்.

------------------